மாஸ்கோ பேச்சு: 'மாஞ்செஸ்டர் கார்டியன்' தூபம்!

Phone No 4502
விலை அரை அணா
Regd. No.M. 5458
இலங்கை, 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.
MALAI MANI
(திராவிடர் தமிழ் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (4—2—50) வெளியூர் (5—2—50) [இதழ் 160

விவாதிக்கப்பெறும் விஷயங்கள் வெகு எளிதில் தீராவாம்!

ஸ்டாலினுடன் சரிசம அந்தஸ்து கோருகிருர் மா சே துங்?

பதவி பறிக்கப்படுமென "ஜோஸ்யம்" கூறுகிறது!

மாஸ்கோவில் ஒரு 'ாதா திர்கு மேலாகியும் ஸ்டா லினுக்கும் மா-சே-துங்கிற்கும் பேச்சு வார்த்தை நீடித்து நடப்பதிலும், சீனாவின் அயல்நாட்டு மந்திரி சோ-என்லாயும், எல்லை மாகாணமான சிங்கியாங்கின் பிரதிநிதிகளும், பேச்சு வார்த்தையில் கலந்துகொள்ள மாஸ்கோ சென்றிருப்பதாலும், இன்றியமையாச் செய்தி பற்றிப் பேசப்படுகிறதென்று ஹேஷ்யங்கள் கிளம்பியிருப்பதாக 'குளேப்' செய்தி நிலையம் அறிவிக்கிறது.

லண்டன், பிப். 3—

மஞ்சூரியாவின் எதிர்காலம், ...ங்க லி ா விவகா ர ... மு லி வை வெகு எளிதில் தீ க்கப்படும் விஷயங்கள் அ வென்று விமர்சகர்கள் க து கிருர்கள். சரிசமத்துவ அந்தஸ்தில் எல்லா விஷயங்களும் தன்னுடன் பேசப்படவேண்டும் என்று மா-சே-துங் கோருவதாகத் தெரிகிறது என்றும் கிரெம்லின் கோரிக்கைகளுக்கு மா-சே-துங் ம ... அவருக்குப் பதவியிலிருந் 'சீட்டு'க் கொடுக்கப்படும் என்பதை மா-சே-துங் அறிந்திருக்கிருர் என்றும் 'மாஞ்செஸ்டர் கார்டியன்' பத்திரிகை எழுதுகிறது.

காமின்பார்ம் சுறுசுறுப்பு!

டிட்டோவை வந்தகாலத்திற்குள்ளே எப்படியாவது ஒழித்துகட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன், காமின்பார்ம் ஏஜண்டுகள் புது தந்திர முறைகளைக் கடைபிடித்து வருவதாக செய்திகள் கிடைத்திருக்கின்றனவென்று 'குளோப்' நிருபர் அறிவிக்கிருர்.

ஹங்கேரி, ருமேனியா ஆகிய நாடுகளில் சென்ற இரண்டு வாரங்களாக துருப்புகள் நடமாட்டம் அதிகரித்திருக்கிறது. இப் படைகள் யூகோ மீது பாயும் சமயத்தில், யூகோவில் டிட்டோவுக்கு எதிராகக் கிளர்ச்சி எழும் என்று புடாபெஸ்டிலுள்ள காமின்பார்ம் அதிகாரிகள் கூறுகின்றனர்.

டிட்டோ ராணுவ அதிகாரி ...ளை இந்தக் காமின்பார்ம் ஏஜண்டுகள் சந்தித்து, டிட்டோவுக்கெதிராகக் கிளம்பும்படி தூண்டி விடுகிருர்கள் என்று தெரிகிறது.

டிட்டோவின் உத்தரவுகளை மீறும்படியும், ஆயுதங்களை ...ம் செய்யும்படியும் இந் அதிகாரிகளுக்கு போதனைகள் செய்யப்படுகின்றனவாம்.

டிட்டோவை ஒழித்துக் கட்டிய பின்பே, ஆஸ்திரிய சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும் என்பதற்காகவே ரஷ்யா இவ் விஷயத்தில் கலந்துகொள்ளத் தயங்குகிறது என்று சில வட்டாரங்களில் கூறப்படுகிறதாம்.

எழுத்துரிமை பறிக்கும் படலம் தொடருகிறது!

சென்னை, பிப். 3—

"கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா?" என்ற நூலை எழுதிய தோழர் "வியாழன்", வெளியிட்ட "மறுமலர்ச்சி நூல் நிலையத்தார்", அச்சக உரிமையாளர் தோழர் எம். எஸ். மூர்த்தி ஆகியோரின் பேரில் 153 ஏ; 295 எ ஆகிய பிரிவுகளின்படி அரசாங்கத்தார் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்துள்ளனர். பிப்ரவரி 6-ந் தேதி சென்னை எழும்பூர் மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஆஜராகும்படி சம்மன் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஷை நூலை அச்சிட்டதற்காக இதன் அச்சகத்தாருக்கு சில மாதங்களுக்கு முன்பு 3000 ரூபாய் ஜாமீன் கோரப்பட்டதும், அதன் விளைவால் அச்சகமே மூடப்பட்டுவிட்டதையும் வாசகர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

யுனைடெட் ஸ்டேட்ஸில் பெண்கள் நிலை

முழு சுதந்தரமளிக்கவில்லையெனத் தகவல்கள்

நியூயார்க், பிப். 3—

அமெரிக்கப் பெண்களைப் பற்றி குறிப்பாகவும் உலகப் பெண்களைப் பற்றி பொதுவாகவும் அவர்களுக்கு அளிக்கப்படும் அந்தஸ்து பற்றி ஒரு ருசிகரமான கட்டுரையை லாரா லிட்ரே என்ற அமெரிக்கப் பெண் 'யுனைடெட் நேஷன்ஸ் உலக்' பத்திரிகை பிப்ரவரி இதழில் எழுதியிருக்கிருர்.

யுனைடெட் ஸ்டேட்ஸின் பல பாகங்களில் இன்னும் பெண்களுக்கு முழு சுதந்திரம் கொடுக்கப்படவில்லை என்றும், உலகில் 46 நாடுகள் பெண்களுக்கு வோட்டுரிமை அளித்திருக்கிறதென்றும், இந்தியா தன் பெண்களுக்கு ஆண்களோடு சரிநிகர்சமான அந்தஸ்து கொடுத்திருக்கிறதென்றும் அவர் எழுதியிருக்கிருர்.

ஐ. நா. வுக்கு தன் மெம்பர் நாடுகளிடமிருந்து கிடைத்துள்ள தகவல்களை வைத்துக்கொண்டு அவர் வெளியிட்டுள்ள விஷயமாவது:—

யு. எஸ். ஸில் 10 ஸ்டேட்டுகளும் மூன்று பிரதேசங்களும் ஜூரி வேலைகளுக்கும் பெண்கள் லாயக்கில்லை என்று தடுத்திருக்கிறது. இங்கிலாந்து இத்தடை 1919லேயே எடுத்துவிட்டபோதிலும் மசாசுசெட்ஸ், வியோமிங் ஆகிய ஸ்டேட்டுகள் 1949ல்தான் இத்தடையை அகற்றியிருக்கின்றன.

14 ஸ்டேட்டுகளில் மைனர் குழந்தைகள் மீது அதிகாரம் தகப்பனுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மணமான பெண்கள் ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளக்கூடாது என்று லூசியானா, டெக்சாஸ், மெக்சிகோ ஆகிய ஸ்டேட்டுகளில் தடை செய்யப்பட்டிருக்கின்றன. பெண்களுக்கென சொத்து உயில் எழுதி வைக்கப்பட்டாலும், அது செல்லுபடியாக கணவன் கையெழுத்து வேண்டும் என்ற விதி ஐந்து ஸ்டேட்டுகளில் இருந்து வருகின்றன. மனைவியும் கணவனும் சேர்ந்து உழைத்து சேர்த்த ஆஸ்தி கணவனுக்கு மட்டும்தான் உரிமையானது என்று 37-ஸ்டேட்டுகளிலும் கொலம்பியா ஜில்லாவிலும் சட்டம் இருந்து வருகிறது.

வோட்டுரிமையைப் பொறுத்தமட்டில் உலகில் பொதுவாக பெண்கள் வெற்றி பெற்றிருக்கின்றனர் என்றே கூறலாம். 46-நாடுகள் பெண்களுக்கு வோட்டுரிமையை அளித்திருக்கின்றன. ஜப்பானில் கூட இந்த உரிமை இப்பொழுது அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஸ்விட்ஸர்லாந்து இன்னும் இதை அனுமதிக்கவில்லை.

புதிதாக சுதந்திரமடைந்துள்ள இந்தியா, இனிமேல், கொரியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் எல்லாம் ஆண்களுடன் பெண்களுக்கும் சரிசமமான அந்தஸ்து உண்டு என்பதை அங்கீகரித்திருக்கின்றன.

குடிமாலாவில் ஆண்கள் எழுதப் படிக்கத் தெரிந்தாலும் தெரியவிட்டாலும் அவர்களுக்கு வோட்டுரிமை உண்டு. ஆனால் பெண்களுக்கு எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்குமட்டுமே வோட்டுரிமை உண்டு. எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குக் கிடையாது.

மெக்ஸிகோவில் மணமானவர்களாக இருந்தால் ஆண்களும் பெண்களும் 18 வயதில் வோட்டுரிமை பெறலாம். மணமாகாதவர்களாக இருந்தால் 21 வயதில்தான் வோட்டுரிமையைப் பெறமுடியும்.

பெருவில் பெண்கள் வோட் செய்யலாம் என்பதுடன் மைனர் ஆக இருந்தும் ஒரு குழந்தைக்குத் தாயாக இருக்கும்பட்சத்தில் வோட் செய்யலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் பெண்கள் வெகுவாக முன்னேற்றமடைந்திருக்கின்றனர். வீட்டு வேலைகள் செய்வதுதவிர அவர்கள் வெளியில் உழைத்து வேலை செய்யவும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிருர்கள். நகரங்களில் போலீஸ் இலாகாவிலும், பல் கண் டாக்டர்கள் வேலையிலும் அவர்கள் உழைத்து சம்பாதிக்க வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

வெள்ளை மாதை மணந்த காபா

லண்டன் பிப். 3—

ரூத்வில்லியம்ஸ் என்ற ஆங்கில மாதை ஆப்பிரிக்க சுதேசிக் கூட்டம் ஒன்றின் தலைவரான ஸெரட்ஸே காமா மணந்ததும் அதனால் ஏற்பட்ட தகராறும், பின் சம சமும் நினைவிருக்கலாம். இப்பொழுது ரூத்வில்லியம் கர்ப்பமுற்றிருக்கிருள். ஜூலையில் பிரசவமாகலாம் என்று கூறப்படுகிறது.

ஒரு வெள்ளை மாதிற்குப் பிறந்த பிள்ளை சுதேசிக் கூட்டத்திற்கே பின்னர் தலைவனாக அனுமதிப்பதா என்ற பிரசினை எழவிருக்கிறது.

லண்டன், பிப். 3—

பிரபல ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் சஞ்சிகையான 'செர்வெல்' லின் ஆசிரியராக 21 வயதுள்ள திருமதி எலிஸபெத் மேவர் என்ற பெண் நியமிக்கப்பட்டிருக்கிருள். இப்பதவியை வகிக்கும் முதல் பெண் இவள்தான்.

பிரான்ஸ்-சீனு அரசியல் உறவு அறுந்து படும்?

ஹோசிமின் சர்க்கார் அங்கீகார எதிரொலி!

பிரஞ்சு சர்க்காரின் அதிதீவிர யோசனை

பாரிஸ், பிப். 3—

இந்தோ—சீனு ஹோசிமின் சர்க்காரை ரஷ்யா அங்கீகரித்ததை ஆட்சேபிக்கும் பிரஞ்சு சர்க்கார் குறிப்பு ஒன்றை மாஸ்கோவுக்கு அனுப்ப பாரிஸிலுள்ள ரஷ்ய அரசுப் பிரதிநிதி மறுத்துவிட்டதை யொட்டி பிரான்ஸ் ரஷ்ய அரசியல் உறவு முறிவுபற்றி பிரெஞ்சு சர்க்கார் தீவிரமாக ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. மாஸ்கோவின் உத்தரவின் பேரிலேதான் ரஷ்ய அரசுப் பிரதிநிதி இம் மாதிரி நடந்து கொண்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

வட சீனுவில் ரஷ்யா கோருவதை எல்லாம் கொடுத்துவிட்டால் மாசே துங்கும், ஹோசிமின்னும் மேற்கு நாடுகளுக்கெதிராக எந்த நடவடிக்கைஎடுத்தாலும் அவைகளுக்கு தான் ஆதரவளித்து, உதவி செய்வதாக ரஷ்யா உறுதி மொழி கொடுத்திருக்க வேண்டும் என்று செய்தியறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது

அடுத்தபடியாக என்ன செய்வது என்பது குறித்து, பிரான்ஸ் இதர மேற்கு வல்லரசுகளைக் கலந்தாலோசித்து வருவதாகத் தெரிகிறது. பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி லண்டன் திரும்புமுன் பாரிஸுக்குச் செல்வார் என்றும், அவருடன் பிரெஞ்சு தலைவர்கள் இவ்விஷயமாகக் கலந்தாலோசிப்பர் என்றும் தெரிகிறது.

பிரெஞ்சுக்கும், ரஷியாவுக்குமிடையே அரசியல் உறவை அறுத்துக் கொள்ளும்படியான தீவிர நடவடிக்கையில் இறங்குவதை 'ஒயிட் ஹால்' ஆதரிக்கவில்லை என்று தெரிகிறது.

காலத்துக்குகந்த கருத்தறிந்த கவிஞர்கள்

—(ப)—

சோவியத் ரஷ்யப் புலமையாளர் பெருநோக்கு

லண்டன், பிப். 3—

ரஷ்யாவில் கவிகள் தங்கள் காதல் கவிதைகளில் சமூக முன்னேற்ற விஷயங்களைப் புகுத்திவருகின்றனர் என்பதை சோவியத் கவியான ஸ்டீபன் பெட்ரோவிச் என்பவர் புகாரெஸ்டில் ருமேனியர்கள் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினுர்.

இதை அவர் விளக்கிக் கூறியதாவது:— ரஷ்யாவில் வாலிபர்கள் கன்னியரின் அழகைக் கண்டு காதலிப்பதாக இப்பொழுது கவிகள் புனையப்படுவதில்லை. கைத்தொழிலில் எந்தப் பெண் அதிகமாக பொருள்களை உற்பத்தி செய்கிருளோ, அதைக்கண்டு வாலிபன் அவள் மீது காதல் கொள்வதாகவே இப்பொழுதெல்லாம் கவி புனையப்படுகிறதாம். —குளோப்

மாலை மணி

சென்னை 4—2—50 சனிக்கிழமை

கதர்ச் சட்டையினர்க்குக் காணிக்கை!

"நீங்கள் மாஸ்கோவுக்கு வந்தால், சுவர்களில் சினிமா நோட்டீஸ்கள் எவ்வளவு ஒட்டப்பட்டிருக்கின்றனவோ, அதே அளவுக்கு விஞ்ஞானச் சொற்பொழிவுக் கூட்டங்களைப் பற்றி அறிவிக்கும் நோட்டீஸ்களும் ஒட்டப்பட்டிருப்பதைக் காணலாம்"

என்று, மாஸ்கோவின் மணத்தைக் காணும்படி, பெருமித உணர்வுடன நம்மையெல்லாம் அழைக்கிறார், ரஷ்யாவின் சிறந்த விஞ்ஞானியான ஏங்கல்ஹார்ட்.

தோழர் ஏங்கல்ஹார்ட், ரஷ்யாவில் மிகச் சிறந்த டரிசான "ஸ்டாலின் பரிசு" பெற்று புகழுடன் விளங்கும் பேரறிஞரும் விஞ்ஞானியுமாவார். அவர் சென்னைப் பல்கலைக்கழக விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் கூட்டத்தில் விஞ்ஞானத்தை ரஷ்யா போற்றி வளர்த்து வரும் விதத்தைப் பற்றிக் கூறும்போது தான், மேற்கூறப்பட்டுள்ள பெருமிதச் சொற்களை வீசியுள்ளார். அவர் பெருமிதம் கொள்வதிலே பொருள் இருக்கிறது; காரணம், அந்த அளவுக்கு ரஷ்யா, சென்ற முப்பது ஆண்டு காலத்தில் விஞ்ஞானத்தை வளர்த்து, வெற்றி பெற்று, இன்பவாழ்வு நடத்திவருகிறது.

ரஷ்யாவில் விஞ்ஞானத்துக்குஎவ்வளவுமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு, இந்த ஒரு எடுத்துக்காட்டே போதுமானதாகும். நம்முடைய துணைக்கண்டமான இந்தியா எதற்கு அதிக மதிப்பு கொடுத்திருக்கிறது; என்பதைக் கண்டறியவேண்டுமானால், தோழர் ஏங்கல்ஹார்ட் குறிப்பிட்டுக் காட்டிய அதே அடிப்படையில் நின்று சுவரொட்டிகளைப் பார்த்தாலே நன்கு விளங்கும். இங்குள்ள சுவரொட்டிகள் அனைத்தும் சினிமா சுவரொட்டிகளாகவும், புராணப்பிரசங்கச் சுவரொட்டிகளாகவுமே இருக்கக் காணலாம். ரஷ்யா சினிமாக்கள் காலத்திற்கு ஏற்றக் கருத்தை வழங்கும், வாழ்க்கையை முன்னேற்றும் சினிமாக்களாக இருக்கின்றன. இங்குள்ள சினிமாக்களோ எனில், அனைத்தும் புராணங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன; ரஷ்யா எல்லாத் துறைகளிலும் விஞ்ஞானக்கண் கொண்டு பார்க்கின்றது. ஆனால் இந்தியாவோ எனில், எல்லாவற்றையும் புராணகாலக்கண் கொண்டு பார்க்கவே பாடுபடுகின்றது. விஞ்ஞான வழி நடக்கும் ரஷ்யாவின் பிரதிநிதி, புராண வழி நடக்கும் இந்தியாவுக்கு அறிவுரைகூறியிருப்பது முற்போக்குக் கொள்கை படைத்த அனைவராலும் போற்றி வரவேற்க வேண்டியதொன்றாகும்.

விஞ்ஞானத்தை ரஷ்யா வளர்த்து வரும் முறையை, அலங்கோல ஆட்சி நடத்தும் இந்த நாட்டு தேசீய அளவந்தார்கள் அறிந்து, அதன்படி நடக்கத் திறமையில்லாவிட்டாலும், சிந்தை தெளிவாவது செய்வார்களே என்பதற்காகத்தான் தோழர் ஏங்கல்ஹார்ட்டின் சொற்களைக் கதர் கட்டும் காங்கிரஸ் ஆளவந்தார்களுக்குக் காணிக்கையாக வைக்கிறோம்; விஞ்ஞானத்தை வெறுத்து, புராண காலப் பெருமையையே பேசும் தேசீயத் தோழர்கள். ரஷ்யாவைக் கண்டாவது கலங்கிய சிந்தை தெளிவார்களாக!

விஞ்ஞானத்தை ரஷ்ய அரசாங்கம் பயன்படுத்தும் விதத்தைத் தோழர் ஏங்கல்ஹார்ட் அவர்களின் சொற்களே தெளிவுபடுத்துகின்றன.

"வந்தந்தப் பகுதிகளின் தேவைக்கேற்றப்படி நாடெங்கும் விஞ்ஞானக் கழகங்கள் இணைக்கப்பட்டு ஆராய்ச்சி வேலைகள் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவதாக, ஒருமத்திய திட்டத்தின் மூலம் மத்திய விஞ்ஞானக் கழகத்துடன் இவற்றின் நடவடிக்கைகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. மூன்றாவதாக தேசீயத் தேவைகளுடன் விஞ்ஞான ஆராய்ச்சி இணைக்கப்பட்டிருக்கிறது ரஷ்யாவின் விஞ்ஞான ஆராய்ச்சி முறையின் முக்கிய அம்சங்கள் இவை."

என்று அவர் எடுத்துக் காட்டியுள்ளார், ஆனால் இந்த நாட்டு அரசாங்கங்களோ சோமநாதபுரத்துக் கோவிலை புதுப்பித்தல், பாதாளலிங்கக் கோயிலை கவர்னர்—ஜெனரல் திறந்து வைத்தல், ஜகனாத் கோவிலின் தரிசனத்துக்கு ஆளவந்த தலைவர் செல்லுதல், தேங்காய் உடைத்து கப்பலை மிதக்கவிடல், குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டு செயலாற்ற முற்படுதல், காந்தியாரின் சாம்பலைத் தீர்த்தத்தில் கரைத்துவிடுதல், மதங்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், புராண விழாக்களைச் செம்மையுற நடத்திக் காட்டுதல், பாரத இராமாயணத்தை மொழிபெயர்த்தல் ஆகிய வேலைகளைத் தங்கள் திட்டங்களாகக் கொண்டிருக்கின்றன. ரஷ்யா விஞ்ஞானத்தைக் கைக்கொண்டு முன்னேறி, நகரத்திற்கு வா என்று தன்நாட்டு மக்களுக்கு அறிவுரை கூறுகிறது. அதே சமயத்தில் இந்தியத் தலைவர்கள் விஞ்ஞானத்தை ஒதுக்கி புராண வாழ்வை நம்பி, நகரைக்கட்டி, குடிசைத் தொழிலை மேற்கொண்டு கிராமத்திற்குச் செல் என்று கூறுகிறார்கள் இந்த இரண்டிலே எது நாட்டிற்கு நல்லது பயந்திருக்கிறது என்பதற்கு ரஷ்யாவையும்-இந்தியாவையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே நன்கு விளங்கும்.

கதர் கட்டும் காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு, அவர் தந்துள்ள மற்றொரு காணிக்கையையும் செலுத்துகிறோம். அது

'எழுத்து அறியாமையை ஒழிப்பது சோவியத்சர்க்காரின் முதல் வேலையாக இருந்தது. ஒரு குறுகிய காலத்திற்குள் ஆரம்பக்கல்வி இலவசமாகவும் கட்டாயமாகவும் கற்பிக்கப்பட்டது பிறகு மக்களின் கலாசாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்காக ரஷ்ய விஞ்ஞானக் கழகத்தின் அடிப்படைக்கிளைகள் நிறுவப்பட்டன. விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்களுக்கும் தேசீய பொருளாதார நிலையங்களுக்குமிடையில் நெருங்கியதொடர்பு இருப்பது மற்றொரு முக்கிய அம்சம்" என்பதாகும் ரஷ்யா முன்னேறியிருப்பது கதரையும் குடிசைத் தொழிலையும் வளர்த்து, விஞ்ஞானத்தைக் கொலை செய்தல்ல, விஞ்ஞானத்தைப் போற்றி வளர்த்தே என்பதைத் தோழர் எங்கல் ஹார்ட்டின் மொழியைக் கொண்டே இனிது விளங்கிக் கொள்ளலாம்

இவைமட்டுமல்லாமல் மக்களிடையே விஞ்ஞான அறிவை பரப்புவதும், ஆராய்ச்சிகளின் பலன்களைப் பொதுமக்களிடையே பிரசாரம் செய்வது ரஷ்ய விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தின் முக்கியமானவேலையாக இருந்துவருகின்றன என்றும் அறிவிக்கப்படுகிறது. தனியாக விளம்பர இலாகா ஒன்றையும் அந்தக்கழகம் நடத்திவருகிறதாம். ரஷ்ய ஆராய்ச்சி சாலைகளில் வேலை செய்வோரில் பாதிப்பேருக்குமேல் பெண்கள் வேலைசெய்கிறார்கள் என்றால், விஞ்ஞானம் எத்துணையளவு சிறப்பாகப் போற்றப்படுகிறது என்பதை அது எடுத்துக்காட்டுகிறது

அரசியல் தலைவர்களுக்கு அளிக்கும் அளவு பெருமையை, விஞ்ஞானிகளுக்கு அந்நாட்டு மக்கள் அளிக்கிறார்கள் என்று சொல்லி பூரிப்படைகிறார் தோழர் ஏங்கல் ஹார்ட். அந்தப் பூரிப்பும், பெருமையும் இந்த நாட்டில் ஏற்பட வேண்டுமாயின், புராணவழி வைக்கப்பட்டு, புது விஞ்ஞான வழி காணப்படவேண்டும். அந்நிலை ஏற்படதோழர் எங்கல்ஹார்ட்டின் சொற்பொழிவு, நல்லறிவு படைத்தவரனைவர்க்கும் நல்ல தெளிவு உண்டாக்கும் என்று கருதுகிறோம்.

அறிவுக் கதிர்!

இந்திரன் தனது இடி முழக்கத்தால் ஆறுகளை வெட்டி, அவற்றை நெடுந்தூரம் செல்லச் செய்தான் என்று இந்துப் புராணம் கூறுகிறது. இம்மாதிரியான புராண கூற்றுக்கள் அதிசயிக்கத் தக்கனவாய் இருந்த போதிலும், அவை பண்படாத மனித அறிவின் கற்பனைகளாகும். ஆனால் விஞ்ஞானம் அப்படிப்பட்டதல்ல. இத்தகைய புராணக் கூற்றுக்களையே மாற்றி அமைத்துவிடும் வண்ணம் அற்புதங்களைச் செய்ய வல்லது விஞ்ஞானம்.

—லார்ட் ஆவ்பரி

[கற்பனை உரையாடல்]

கண்டதும் கேட்டதும்

[துப்பறிவோன்]

உரையாடுவோர் :—சேதுராமய்யர், கிருஷ்ணசாமி.

இடம் :—சென்னை கச்சாலீஸ்வரர் அக்ரஹாரம், சேதுராம ஐயர் வீட்டுத் திண்ணை.

காலம் :—காலை மணி சுமார் 9.

சேதுராமய்யர் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார் தெருவழியே, கையிலே சிகரட்டுடன், கட்கத்தில் 'பிளிட்ஸ்' பத்திரிகையுடனும் கிருஷ்ணசாமி வருகிறான்; கிருஷ்ணசாமியைக் கண்டதும்...

சேது : டேய், கிட்டு! எங்கடா அதுக்குள்ளே புறப்பட்டுட்டே!

கிட்டு : இல்லே மாமா, டைம் ஆயிடுத்து. கூட மந்த் எண்டு பாருங்கோ....

சேது : அதிருக்கட்டும் நேத்தி எக்ஸிபிஷனுக்கு நீகூட வந்திருந்தே போலிருக்கே!

கிட்டு : ஆமாம் மாமா, உங்களை, மாமியேயெல்லாம்கூட பார்த்தேனே.

சேது: அது சரிடா, ட்ராமா பார்த்தியோன்னோ?

கிட்டு: ஆமாம்...நீங்கதான் அந்த ட்ராமாவை மெச்சிக்கொள்ளணும்...சேச்சே நேக்கென்னமோ அதெல்லாம் பிடிக்கவேயில்லே.

சே : ஏண்டா! அதுக்கென்னடா குறைச்சல், எவ்வளவு நேர்த்தியா இருந்துச்சு, அந்தக் கருஞ்சட்டைக்காராளே வெளு வெளுன்னு வெளுத்துக் கட்டிட்டாளே!

கிட்டு : நன்னா வெளுத்துக் கட்டினாளே. என்னமோ நல்ல காலம், அவா அதைக் கண்டுகொள்ளாமே கண்ணியமா விட்டுட்டா. அவா கொஞ்சம் மனசு வச்சிருந்தான்னோ தெரியும்! வெளுத்துக் கட்றவா நாமா அவாளா என்கிறது!

சேது : டேய், இதென்னடா நீ இப்படிப் பேசறே! அவா கூட்டத்திலேதான் இப்போ ஒத்துமையே இல்லாமே போயிட்டுதே. நம்மை யார் என்ன செய்ய முடியும்; அது தெரிஞ்சுதானே இந்தமாதிரி ராமவுக்கு காங்கிரஸ் கமிட்டிலே இடங்கொடுத்தா.

கிட்டு : போதும், போதும் நீங்க நினைக்கிறது சுத்த தப்பு அவாளுக்குள்ளே என்னதான் டிபரன்ஸ் ஆப் ஒபீனியன் இருந்தாலும், பொது விஷயத்திலே-அதுவும் இந்த மாதிரி அவாளைக் கிண்டல் பண்ற விஷயத்திலே அவா விட்டுக்கொடுக்கிறவாளல்ல. அது மட்டுமில்லே, தமிழ் நாடே இன்னைக்கு அவா கைக்குள்ளே யிருக்கு. இனிமே அவாளோடே பகைச்சிண்டு நாம் வாழ முடியாது தெரியுமோன்னே!

சேது : போதுண்டா, போதும் உன் பிரசங்கம். நீங்கெல்லாம் சிறு பயல்கள் உங்களுக்குத் தெரியாது. நம்மை யாரும் ஒன்னும செய்ய முடியாது. இப்போ நடக்கிறது நம்ம கவர்மென்ட்; தெரியுமோன்னோ?

கிட்டு : தெரியும், தெரியும்; அதனாலேதான் சொல்றேன். நம்ப கவர்மென்டுக்கு நல்ல பேரு கிடைக்கணுமின்னா நாம பொதுஜன அபிப்பிராயத்துக்கு மதிப்பு கொடுக்கணும். இது உம்மைப்போன்றவைதிகாள் காலமல்ல. சோஷலிசக் காலம். இப்படிப்பட்ட காலத்திலே கொஞ்சநஞ்ச வகுப்புவாதம் இருக்குன்னா, அதுக்குக் காரணம் உம்மைப் போன்றவாதான். உங்களாலேதான் எங்களைப் போன்ற எம்பீப்பிள் எல்லாம் கஷ்டப்படவேண்டியிருக்கு...

சே: போதும், போகண்டா உன்னுடைய சோஷலிசம். அவா பேசாததைவிடவா எழுதாததைவிடவா நாம் செய்துட்டோம்.

கிட்டு : போதுமே உங்க வாதம். அவா பேசறது எழுதறது என்றால் அதிலே அர்த்தமிருக்கு, நியாயமிருக்கு. அதுக்கு ஏத்தமாதிரி உம்மைப் போன்றவா நாட்டைக் குட்டிச்சுவராக்கி வச்சிருக்கா.

சேது : ஓகோ! எதுடாப்பா உனக்கு இவ்வளவு நயபுத்தி வந்துடுத்து! அப்படின்னு போடாப்பா, போ! போயி அவா கட்சியிலேயே சேர்ந்துக்கோயேன்.

கிட்டு : ஏன், சேர்ந்தாதான் தப்பென்ன, அந்த வடநாட்டு மார்வாரி, குஜராத்திபசங்களைவிட நம்ப நாட்டிலே இருக்கிறவா என்ன அவ்வளவு பொல்லாதவாளா? உம். இதெல்லாம் இப்பத் தெரியாது, போகப் போகத் தெரியும், அந்த வடக்கித்தியான்கள் நம்ப சவுத் இண்டியா மேலே சவாரி பண்ணச்சே! சரி, இவ்வளவு பேசறியளே நம்ப ஆச்சாரியார் கதி என்னாச்சு பார்த்தியளோ!

சேது : என்னடா அச்சு. கவர்னர் ஜனரலா இருந்தார், நிறைய சம்பாதிச்சார் இப்போ சொஸ்தமா ஆத்திலே உட்கார்ந்துண்டு பென்ஷன் வாங்கப் போறார். இதைவிட வேறு என்ன வேண்டும்?

கிட்டு : ஆகா. என்ன அழகான வாதம் மாமா! நான் கேட்கிறேன் நம்ப சி. ஆர். கவர்னர் ஜனரல்லா இருந்ததும், பணம் சம்பாதிச்சதும் தானா பெரிசு? அவருடைய புத்திசாலித்தனம், திறமையும் இதுக்குத்தானா உபயோகப்படணும். நியாயமா பார்த்தால் இந்தக்குடியரசிலே நம்ப சி. ஆருடைய. திருவாசமின்னு

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

திருவள்ளுவர் நினைவு நாள்

சென்னைத் திருவள்ளுவர் மன்றத்தின் சார்பில் 5—2—50 ஞாயிறு மாலை 4-மணிக்கு நடக்கவிருக்கும் திருவள்ளுவர் நினைவு நாள் விழாவில்

தோழர் ஓரந்தூர் இராமசாமி

அவர்கள் தலைமையில்

தோழர் சி என். அண்ணாத்துரை

'திருவள்ளுவரும் சாக்ரடீஸும்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

திருவத்திபுரம் பொங்கல் விழா

திருவத்திபுரம், ஜன. 30— வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவத்திபுரத்தில் இவ்வாண்டு "பொங்கல் விழா" 19—1—50 அன்று முதல் 26-1-50 வரை "பெரியார் நகரில்" மிகச் சிறப்பான முறையில், இம்மாகாணத்தில் இதுவரை எங்கும் நடைபெறாத வகையில் நடைபெற்றது.

விழா நடைபெற்ற "வ. உ. சி. பந்தல்" மிகப் பெரிய அளவில் [illegible] அமைக்கப்பட்டிருந்தது. அதை அழகுபடுத்தும் வீதியிலே மின்சார விளக்கு அலங்காரமும், ரோட்டில் இருந்து [illegible] தல் வரை இருமருங்கிலும் விளக்குகள் போன்ற (Street Light) வரிசை விளக்குகளும் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

விழாப் பந்தலின் முகப்பில் உழவன் ஏர் உழுகின்ற காட்சி மிகப் பெரிய அளவில் உருவமாகச் சித்தரிக்கப்பட்டு, அதன் கீழ் "ஏர் முழுவதும் [illegible]" என்ற சொற்றொடர் எழுதப் பட்டிருந்தது. அதைச் சுற்றிலும் மின்சார விளக்குகள் (Series Bulbs) அமைக்கப்பட்டு அக்காட்சியை அழகுபடுத்திய வண்ணமிருந்தன. விழாப் பந்தலுக்கு எதிரிலே, பதோர் கம்பத்தில் பறந்து கொண்டிருந்த நம் திராவிட முன்னேற்றக் கழகக் கொடியின் தோற்றம் இவ்வழகினையும் விட மிகச் சிறப்புற அமைந்திருந்தது.

கண் காட்சி

இத்தனி ஆண்டுவிழாக்களில் காணாத புதிய நிகழ்ச்சியாகும் இது. இதற்கென அமைக்கப்பட்டிருந்த அறைகளில் கீழ்க்கண்ட கண்காட்சிகள் நடைபெற்றன.

1. வாலசபாத் இந்துமத பாடசாலையினரின் கைத்தொழில்களான [illegible] செய்தல், மாணவர்களின் விளையாட்டு [illegible] செய்தல், [illegible] ஆகிய நிகழ்ச்சிகள்

2. சென்னை சர்க்கார் மீன் இலாகாவினரால் கொண்டு வரப்பட்ட மீன் இனங்களின் கண்காட்சி.

3 காஞ்சிபுரம், திராவிட நாடு கிளைப்பதிப்பின் [illegible] கருத்துக் கொண்ட ஓவியங்கள்.

4 பூந்தமல்லி அறிஞர் திரு. வி. கந்தசாமி (முதலியார்) அவர்களால் எழுதப்பெற்ற பழங்கால ஓவியங்கள்.

5. மொகஞ்சதாரோ அகழ்வாராய்ச்சியில் கிடைத்த திராவிட நாகரிகத்தின் சின்னங்கள்,

6. விழா நிர்வாகிகளால் அமைக்கப்பட்ட "விஞ்ஞான பிள்ளையார்". இது விழாவிற்கு வந்திருந்த அனைவருடைய கவனத்தையும் ஈர்த்து விட்டது. இதன் அருகே மக்கள் ஒவ்வொருவராகச் சென்று கேள்வி கேட்டு, தக்க பதில் பெற்று, விஞ்ஞான வளர்ச்சியினையும், பிள்ளையார் பதில் சொல்லும் திறத்தினையும் கண்டு வியப்புற்றனர்.

இவை தவிர, விழா நிர்வாகிகளின் வேண்டுகோளுக்கிணங்கி மாகாண சுகாதார இலாகாவினரால் (Director Of Public Health, Madras) "பொதுச் சுகாதாரம்" சம்பந்தப்பட்ட சினிமாப் படங்கள் உள்ளூர் சினிமாவில் இலவசமாகக் காட்டப்பட்டன. விழா நாட்களில், தினந்தோறும் கொட்டும் பனியையும் கவனியாது, 5000-க்கு மேற்பட்ட மக்கள் (பெண்கள் உட்பட) கூடி, அறிஞர் தோழர் அண்ணாத்துரை அவர்கள் சொற்பொழிவு அன்று மட்டுமல்லாமல் [illegible] பக்கங்களிலும் [illegible] என்று [illegible] மிகையாகாது.

பந்தல் அலங்கரிப்பு, ஒலிபெருக்கி அமைத்தல் ஆகிய வேலைகளை நல்ல முறையிலே [illegible], ஒத்துழைப்பு நம் இயக்கப் பணியாளர்களான சென்னை கணேசா ரேடியோ நிலையத்தார் உதவியினால் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

விழா நிகழ்ச்சிகள்

முதல் நாள் 19-1-50 வியாழக்கிழமை தோழர் சி. வே. சுப்பராயன் அவர்கள் தலைமையில் மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார் பேசுகையில், நம் நாட்டு வெள்ளையர், இருவிழாக்களுக்கு அடிக்கடி செல்கின்றவர்களே ஒழிய, தீபாவளி கார்த்திகை ஆகிய நம் பண்புக்கு விரோதமான பண்டிகைகளைக் கொண்டாடுகிறவர்களே ஒழிய நம் நாட்டின் ஓர் விழா—அதுவும் நம் தொழிலில் நாம் வெற்றி கண்ட விழா—பொங்கல் விழா—இதைக் கொண்டாட மக்கள் முன்வரவில்லை! இந்தப் பேதமையைப் பற்றி நான் என்னவென்று சொல்வது? என்று குறிப்பிட்டு விட்டு, பெண்களால்தான் நம் நாட்டைச் சீர்திருத்தமுடியும் என்றும், பெண்கள் [illegible] வரும் மூடநம்பிக்கையை ஒழித்து முன்னேற்றமடைய வேண்டும் எனவும் பேசினார்கள்.

அடுத்தபடியாகப் பேசிய தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் நம் மாகாண மந்திரிகளின் ஊதாரிச் செலவுகளைக் கண்டித்துவிட்டு, குழந்தைகள் அதிகமாகப் பிறந்து விட்டன அவைகளைக் காப்பாற்றப் போதிய உணவில்லை எனக்கூறும் மந்திரிகள் கூற்றுக்கு ரஷ்ய நாட்டு சர்க்காரின் போக்கைச் சுட்டிக் காட்டி மிக விளக்கமாகப் பேசிவிட்டு, நம் தாய்மார்களும் நம் நாட்டு நிலைக்கேற்ப குழந்தைகள் பிறப்பதைக் (Birth control) குறைத்துக் கொள்ள முயலவேண்டும் எனவும் குறிப்பிட்டார்கள்.

20—1—50 வெள்ளிக்கிழமை— இரண்டாம் நாள் விழா

தோழர் சி. வே. சுப்பராயன் அவர்கள் தலைமையில் சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் தோழர் அன்பு கணபதி அவர்கள் பேசுகையில் தமிழர் தமிழ்க் காப்பியங்களில் உள்ள விழா பலவற்றை எடுத்துக் காட்டி அவற்றுள் தலைசிறந்தது பொங்கல் விழா தான் எனக் குறிப்பிட்டு விட்டு, இவ்வாண்டு பொங்கல் பாட்டாளிகளுக்கு இன்பப் பொங்கலாக இல்லை, துன்பப் பொங்கலாகத்தான் இருந்தது என்றும், இனி வரும் பொங்கலாவது மகிழ்ச்சிப் பொங்கலாக இருக்க சர்க்கார் ஆவன செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

பின்னர் தோழர் புலவர் கோவிந்தன் பேசுகையில், இன்றைய அரசியலாரின் ஆணவப் போக்கைக் கண்டித்து விட்டு, [illegible] ஆட்சியின் வழி [illegible] போக்கை விளக்கி விட்டு, எதிர்காலத்தில் இவ்வரசாங்கம் மண்ணைக் கவ்வுவது நிச்சயம் எனவும் குறிப்பிட்டார்.

21—1—50 சனிக்கிழமை மூன்றாம் நாள்

தோழர் சி. வே. சுப்பராயன் அவர்கள் தலைமையில் அண்ணாமலை பல்கலைக் கழக தமிழ்த்துறை ஆராய்ச்சியாளர் தோழர் ஒளவை துரைசாமி அவர்கள் பேசுகையில், தான் எந்த [illegible] மக்கள் சமுதாயத்தைச் [illegible] இருக்கிறதோ அந்த இயக்கத்தை ஆதரிக்கத் தயார் என்றும், முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த இத்தோழர்கள் கோயிலை அணுகி, கோயிலில் உள்ள கொழுந்துகளை [illegible] "கோயில் பெருச்சாளி"களை ஒழிக்க முயல வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

தோழர் தில்லை வில்லாளன் அவர்கள் பேசுகையில் உலகம் முன்னேற்றப் பாதையில் மிக வேகமாக போய்க்கொண்டிருக்கிறதென்றும், அப்பாதையில் சமூகம் [illegible] முன்னேற்றம் செய்ய வேண்டும் என்றும், பழம் புராணங்களை [illegible] ஒழித்துவிட்டு "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்பதின் [illegible] சமுதாயம் வாழ்வு காணும் [illegible] எனவும் பேசினார்.

22—1—50 ஞாயிற்றுக்கிழமை நான்காம் நாள்

மாலை 5 மணிக்கு வாலசபாத் இந்து மதபாடசாலையிலிருந்து வந்திருந்த சுமார் 40 மாணவர்கள், வீரதாச்சாரி கோபுரம் கட்டுதலில் பல இரட்டை நிகழ்ச்சிகள், உடற்பயிற்சி முதலிய பல நாடக நிகழ்ச்சிகள், கோல் சுழற்றுதல் ஆகிய பல இரட்டை நிகழ்ச்சிகளை மிகத் திறம்படச் செய்து காட்டினர்.

மாலை 6-30 மணிக்கு தோழர் சி. வே. சுப்பராயன் அவர்கள் தலைமையில் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் பேசுகையில், இந்த நாட்டிலே பழங்காலத்தில் ஜாதி, மதம் இல்லாது இருந்த ஓர் நிலையை விளக்கி, தற்சமயம் நமக்குள் ஏற்பட்டுள்ள ஜாதி வேற்றுமையைக் குறிப்பிட்டு, அவற்றை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை விளக்கி, அவற்றிற்குண்டான வழிவகைகளைச் சர்க்கார் செய்ய முயல வேண்டுமே ஒழிய, ஜாதி உணர்ச்சியை மூட்டும்படியான வகையில் நடந்துகொள்ளக் கூடாது எனவும் கூறினார்.

இரவு 10 மணிக்கு வாலசபாத் இந்து மத பாடசாலை மாணவர்களால் "இளங்கோவன்" [illegible] பயனுள்ள நடிப்பு என்ற கல்வி சம்பந்தமான நாடகம் நடைபெற்றது. இளஞ்சிறுவர்களாக இருப்பினும் நடிப்புத் திறனில், பழம்பெரும் நாடக வல்லுனர்களைக் கூட மிஞ்சி விட்டனர், என்றே கூறலாம்.

23—1—40 திங்கட்கிழமை— ஐந்தாம் நாள்

தோழர் சி. வே. சுப்பராயன் அவர்கள் தலைமையில், தோழர் [illegible] கே. சீனிவாசன் அவர்கள் பேசுகையில், நம் மக்களுக்கு விஞ்ஞான அறிவு வளர வேண்டும் என்றும், இன்னமும் மக்களுக்கு [illegible] பெருக்கி [illegible] படி வேலை செய்கிறது என்பது, இந்த விஞ்ஞானப் பிள்ளையார் எப்படிப் பேசுகிறது என்பது தெரியாது—ஆனாலும் அவர்களுக்கு மேலே உள்ள ஏழு உலகங்களும், கீழே உள்ள ஏழு உலகங்களும், மட்டும் தெரிந்திருக்கிறதென்றும், இந்த நிலை [illegible] மாறத்தான் வேண்டும் என்றும், அதற்கு இதைப் போன்ற விழாக்கள் பயன்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் "திருக்குறள் தெளிவு" என்ற தலைப்பில் பேசுகையில் முதல் குறளில் உள்ள "ஆதிபகவன்" என்னும் சொல் ஓர் தமிழ்ச்சொல் அன்று, அது [illegible] என்ற நூலில், [illegible] போன்ற [illegible] அந்தப் பொருளில் தான் வள்ளுவர் [illegible] என்றும் கூறி, அச்சொல் வள்ளுவரின் [illegible] தந்தை தாயையோ அன்றி கடவுளையோ குறிப்பிடவில்லை என்றும், மலர்மிசை... என்ற குறளுக்கு உண்மைப் பொருள் விளக்கம் செய்தபோது, மிசை என்பது 7-ம் வேற்றுமை உருபு என்றும், அதனால் உலகின்கண் உழைக்கும் ([illegible]-உழைத்த) மக்கள் நோய் நொடியின்றி நீடுவாழ்வார் என்று பொருள் கூறி, தென்புலத்தார்... என்ற குறளில் வரும் தென்புலத்தார் என்ற சொல்லுக்கு புலவர் உரைகளில் (தென்புலத்தார் குமரியார்) குமரிக்கோட்டம் கடல்கொண்ட காலை, வீடிழந்து தவித்த தமிழ் மக்களை (அகதிகளை) வள்ளுவர் அழைத்து உண்பிக்கும்படி வேண்டினார் என்றும், வள்ளுவர் ஒரு நாத்திகர், அவருக்குக் கடவுள் பால் நம்பிக்கை இல்லை என்பதையும் தக்க ஆதாரங்களுடன் நீண்ட நேரம் விளக்கிக் கூறினார்.

24—1—50 செவ்வாய்க் கிழமை ஆறாம் நாள் காளைத்தேர்வு

ஏற்கனவே விளம்பரம் செய்திருந்தபடி இன்று காளைத்தேர்வு நடைபெற்றது. சுமார் 15 காளைகளுக்குமேல் வந்திருந்தன. இராணிப்பேட்டை கால்நடை இலாகா தலைவர் தலைமையில் திரு. வரதக்கவுண்டர், தங்கம் முதலியார் ஆகியோர் நடுவர்களாக (Judges) இருந்தனர். திருவத்திபுரம் திரு கன்னியப்ப முதலியாரின் ஒரு ஜதை காளைக்கு ரூபாய் 20/-ம் திரு சுப்பிரமணியம் அவர்களின் காளைக்கு ரூபாய் 5/-ம் பரிசளிக்கப்பட்டது.

மாலை 6-30 மணிக்கு சர்க்கார் கால்நடை இலாகாவினரால் கால்நடை சம்பந்தமான நிழற்படம் (Lantern Show) காண்பிக்கப்பட்டு, விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது.

மாலை 7 மணிக்குத் தோழர் ராஜு [illegible] கல்யாணசுந்தரம் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், இந்நாட்டு மக்களின் சம்மதம் இல்லாமலேயே [illegible] ஆட்சி வருகிறதென்றும், இதில் நமக்கு (திராவிடர்களுக்கு) சிறிதளவும் நம்பிக்கை இல்லை என்றும், இப்படிப்பட்ட சர்வாதிகாரப் போக்குள்ள ஆட்சியை மாற்றியமைக்க நாம் முயல வேண்டும் எனவும் கூறினார்.

தோழர் அண்ணாத்துரை

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

இனி நடப்பவை

சென்னை:—திருவல்லிக்கேணி வெஹரோடு நகராண்மைக் கழகப் பள்ளியில் ([illegible]) 5—2—50 ஞாயிறு காலை 9 மணிக்கு திருவள்ளுவர் நினைவு நாள் கொண்டாடப்பெறும். தோழர் கா. அப்பாத்துரை எம். ஏ. எல். டி. தலைமைவகிப்பார். தோழர்கள் என். ஜீவரத்தினம் எம். ஓ, திருமலைமுத்துசாமி, ஈ. இராஜவேல், டாக்டர் எம். ஏ. கரீம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சென்னை:— சைதாப்பேட்டை தி.மு. கழகக்கட்டிடத்தில் (என். 87 ஜோன்ஸ் ரோடு) 5-2-50 காலை, 9-மணிக்கு உறுப்பினர் கூட்டமொன்று நடைபெறும். உறுப்பினர் அனைவரும் இதையே அழைப்பாகக்கொண்டு தவறாமல் வருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சென்னை:—தோழர் கி. கணபதி-தோழியர் ஜி. பலாம்பிகை திருமணம் 5-2-50 ஞாயிறு காலை 9 மணிக்கு தோழர் ஏ. எஸ். இராமன் அவர்கள் தலைமையில் அடையாறு [illegible] புரம் 55 எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும். தோழர்கள் சஞ்சீவி. மணி [illegible] கே. எம். அண்ணாபிரான் ஆகியோர் பேசுவர்.

* * *

பொள்ளாச்சி:—திராவிட முன்னேற்ற வாலிபர் சங்கப் பொதுக் கூட்டம். 5—2—50 ஞாயிறு இரவு 8 மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெறும். 9-மணிக்கு செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

* * *

[illegible]:—தோழர் தில்லை—வில்லாளன் அவர்களின் அன்னை[?] தோழர் சந்திரகோபாலன் அவர்கட்கும் தோழியர் சரசுவதி அம்மையாருக்கும் 6-2-50 திங்கள் காலை 7-மணியளவில் தோழர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ., அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். தோழர்கள் முருகு. சுப்பிரமணியம், கே. ஏ. மதியழகன், என். எஸ். இளங்கோ, இராம. அரங்கண்ணல் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

*

சென்னை:—டாக்டர் சி. நடேசன் மன்றத்தின் சார்பாக 5-2-50 காலை 9-30 மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி பெல்ஸ்ரோட் நகராண்மைக் கழக ஆண் பாடசாலையில் திருக்குறள் துவக்கவிழா நடைபெறும். அறிஞர் கா. அப்பாத்துரை M. A. L. T. அவர்கள் தலைமையில் ஜி. பெருமாள் B.O.L. (Hons) சொற்பொழிவாற்றுவார்.

* * *

திருவள்ளுவர் நினைவு நாள்

சென்னை திருவள்ளுவர் கழக சார்பில் 5-2-50-ல் திருவள்ளுவர் நினைவு நாள் விழா நடைபெறும். 5-2-50 ஞாயிறு காலை 7-30 மணிக்குப் புரசை, முத்தைய செட்டியார் உயர்நிலைப் பள்ளியிலிருந்து திருக்குறள் நூலை யானை மேல் வைத்து ஊர்வலம் தொடங்கும், சென்னை உதவி மேயர் தோழர் எஸ். பி. இராசபாதர் தலைமை வகிக்க, தோழர் ம. பொ. சிவஞானம் அவர்கள் ஊர்வலத்தைத் துவக்கி வைத்துப் பேசுவார்கள். தெருக்களிலும் அறிஞர் பலர் ஆங்காங்கு பேசுவர். பகல் 12 மணிக்கும் புரசையில் ஏழைகட்கு உணவளிப்பு நடைபெறும். மாலை 4 மணிக்கு, முத்தையசெட்டியார் பள்ளியிலேயே சொற்கூட்டம் நடைபெறும். தோழர் ஓமந்தூர் பி. இராமசாமி அவர்கள் தலைமையில், தோழர்கள் சி.என். அண்ணாத்துரை, க. வெள்ளைவாரணனார், பி. வ. ஜகந்நாதன் ஆகியோர் முறையே "திருவள்ளுவரும் சாத்திரமும்," "திருவள்ளுவர் நூல் நயம்" "திருவள்ளுவர் காட்டும் காதல்" என்பவை பற்றிப் பேசுவார்கள். சென்னை நகர இஞ்சினியர் தோழர் எம். மீரான் சாயபு அவர்கள், திருக்குறள் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கட்குப் பரிசு வழங்குவார்கள்.

தி. மு. கழகக் கூட்டங்கள்

5—2—50

திருப்பத்தூர் (வ. ஆ.)	இரா. நெடுஞ்செழியன். சத்தியவாணிமுத்து. எம். பி. வடிவேலு.
திருவண்ணாமலை:—	ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன், சி. பி. சிற்றரசு ஏ. வி. பி. ஆசைத்தம்பி.
கும்பகோணம்:—	கே. கே. நீலமேகம், க. அன்பழகன், கே. ஏ. மதியழகன், இளவழகன் (தி. மா. மு. ச.)
வடக்கூர் (தூத்துக்குடி):—	டி. பி. ஜே தி, எஸ். என் ராஜன், ஜி பி நெல்சன் வி எம். ராஜன எம். இரத்தினப்,

திருவத்திபுரம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் தம் சொற்பொழிவில், நாம் தற்பொழுது அமையப்போகும் குடியரசை எந்தெந்த நோக்கில் நடத்திச் செல்ல வேண்டும் என்பது பற்றியும், அந்த நோக்கில் நாம் தவறின நோக்கு பற்றியும், இன்னும் கூட நமக்கு உள்ள வாய்ப்பு, அதை நாம் எப்படி பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பது பற்றியும், மத்திய அரசாங்கத்திடம் அளவுக்கு மீறிய அதிகாரம் சேர்ந்து விட்டது என்றும், இனி எந்த ஒரு மாகாணமும் தனித்தியங்கும் சக்தியுள்ளதாக இந்த அமைப்பாளர்கள் வைக்கவில்லை என்றும், இம்மாதிரி அதிகாரத்தை ஓரிடத்தில் ஒப்படைத்துவிட்டால் நாட்டிலே, பொருளாதாரப் பஞ்சம், தனிப் பஞ்சம் கட்டாயம் ஏற்பட்டே தீரும் என்றும் இந்த மாதிரியான நிலைமாற நாம் அனைவரும் பாடுபட வேண்டும் என்றும் கூறினர்.

25—1—50 — புதன்கிழமை— ஏழாம் நாள்

தோழர் சி. வே. சுப்பராயன் அவர்கள் தலைமையில் உயர்திரு நாவலர். எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள் பேசுகையில், தற்கால அரசியல் தலைவர்கள் எதையும் ஆதாரமாகக் கொண்டவர்களாக இருப்பினும் அவர்கள் தாங்கள் செய்வதாகச் சொல்லிக் கொள்ளும் தியாகத்தினால்தான் அந்தப் பதவிக்கு வர முடிந்ததே ஒழிய வேறொன்றுமில்லை என்று கூறிவிட்டு, திருக்குறளைப் பற்றிப் பேசுகையில், புதுமைக் கருத்துக்கள் கொண்ட ஒப்புயர்வற்ற அரிய நூல்களுக்கு வலிதமாக பொருள் கூறியிருக்கின்றனர் என்றும், இடையே வந்த ஒரு இனம் அந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொண்டு, நினைத்த மாதிரி பொய்யுரை எழுதி அதன் பெருமையையே கெடுத்து விட்டது என்றும், ஒவ்வொருவரும் சிந்தித்து தக்க பொருள் கண்டு கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

தோழர் அன்பழகன் அவர்கள் தன் பேச்சில், இந்த நோயில் (இதே ஊரில் பக்கத்திலே திருவிழா நடக்கிறது)—அத்திருவிழாவிற்கு வருவதை விட்டு, மக்கள் அஞ்ஞான விழாவிற்குத்தான் செல்லுகிறார்கள் என்றும் இந்நிலை மாறவேண்டும் என்றும் வேண்டினும் இனி திருவிழா போன்றவைகளுக்குச் செல்லாமல், எப்படி 18 முழ புடவையிலிருந்து 10 முழ புடவை மாற்றத்திற்கு இடம் கொடுத்

நாட்களோ, எப்படி அகல் விளக்கு ஏற்றுவதிலிருந்து மின்சார விளக்கு ஏற்றப்பழகிக் கொண்டார்களோ, அந்தமாதிரி பொங்கல் விழா போன்ற கூட்டங்களில் அடிக்கடி கலந்து கொண்டு மனமாற்றம் அடைய வேண்டும், எனக் கேட்டுக் கொண்டார்.

பாட்டாளி—நாடகம்

இரவு 11 மணிக்கு உள்ளூர் கழகத் தோழர்களால் நடிக்கப்பெற்ற "பாட்டாளி" என்ற சீர்திருத்த நாடகம் நடைபெற்றது. மிகக்குறுகிய நோக்கில் பயிற்சியடைந்திருந்தாலும்; நடிகத் தோழர்கள் தங்களுக்குரிய பாகங்களை மிகத் திறமையாக நடித்து, பொதுமக்களின் கவனத்தைக் கவர்ந்து விட்டனர். இடையே, மின்சார விளக்குகளின் உதவியால் பல வண்ணங்களில் நாடக மேடை அழகுபடுத்தப்பட்டதனால், நாடகம் மேலும் சிறப்புற ஏதுவாக இருந்தது.

26-1-50 வியாழக்கிழமை— எட்டாம் நாள்

இன்று "குடியரசு" தினவிழாவானதால் கூட்டம் நடைபெறக்கூடாது என பயத்தில் மாற்றுக்கட்சித் தோழர்கள் முயற்சித்தனர். நகரில் 144 என்று கூட சொல்லி கூட்டத்தை நிறுத்திவிட எண்ணினர். ஆனால், அவர்கள் எதிர்பார்த்தபடி நடைபெறாமல், மாலை 6-30 மணிக்குத் தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் தலைமையில், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்பொழுது சமதர்மம் தற்சமயம் இருக்கும் நிலை, ஏன் இந்நிலை உண்டாயிற்று, இதை எப்படி மாற்ற நாம் முயலவேண்டும் என்பது பற்றி மிக விளக்கமான முறையில் பேசினர்.

கடைசியாக, தோழர் புலவர் கோவிந்தன் அனைவருக்கும் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

(ந-ள்)

கட்டுரைப் போட்டி

மேற்படி விழாவின் சார்பில் கேட்டிருந்த கட்டுரைகள் வந்து கிடைக்கப்பெற்றோம். அவைகளை சென்னையில் உள்ள தேர்வுக் குழுவினர்களால் திருத்தம் செய்ய அனுப்பியுள்ளோம். முடிவு தெரியவில்லை. விரைவில் முடிவும் பரிசும் தெரிவிக்கப்படும்.

திருவத்திபுரம் பொங்கல் விழாக் குழுவினர்

பொங்கல்விழாக் கூட்டங்கள்

திமிரி

திமிரி:— 21-1-50 சனிக்கிழமை இவ்வூர் பேட்டை மைதானத்தில், கோவலூர் புலவர் குப்புசாமி அவர்கள் தலைமையின் கீழ், பொங்கல் விழா நடைபெற்றது. தோழர் மா. இளஞ்செழியன் பி.ஏ. (ஆனர்ஸ்) அவர்கள் இவ்விழாவிற்கும் ஆரியப் பண்புகளுக்கு முள்ள வேற்றுமைகளை எடுத்துக் கூறி, விரிவானதோர் சொற்பொழிவாற்றினர்.

துத்திக்குளம்

துத்திக்குளம்:—(சேலம் மாவட்டம்) இவ்வூரில் தி. மு. க. தோழர்களால் பொங்கல் விழா சிறப்பான முறையில், 14-1-50 அன்று கொண்டாடப்பட்டது. அதுபோது தோழர்கள் அ. ப. சுப்பராயன், கு. சி. ராசு, அ. ச. செட்டியண்ணன், அ. அ. குப்பமுத்து, அ. ச. சுந்தரம் ஆகியோர்கள் "கடவுள்களின் அவதாரங்கள்" என்னும் சீர்திருத்த நாடகத்தை மிகச் சிறப்புடன் நடத்திக்காண்பித்தனர்.

அறுப்பர் பாளையம்

அறுப்பர்பாளையம்:— 14-1-50 அன்று மாலை தி. மு. வா. கழகத்தின் சார்பாக தோழர் எம். கே. சே. முருகேசர் தலைமையில் 'தைத் திருநாள்' கொண்டாடப்பட்டது. அதுபோது, விழாவினைப் பற்றி தோழர்கள் திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம், எம். கே. கே. குமாரசாமி, எ. வி. பழனிச்சாமி, ம. நடராஜன் எ. வி. ராமப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். விழா இரவு பத்துக்கு இனிதே முடிந்தது.

மேட்டுப்பாளையம்

மேட்டுப்பாளையம்:—(முசிறிவட்டம்) 15-1-49 ஞாயிறு அன்று இவ்வூர் அஞ்சல் அலுவலகத் தலைவர் தோழர் பெ. க. பசுபதி அவர்கள் தலைமையில், தமிழர் விழாவும் வள்ளுவர் விழாவும், பகுத்தறிவுப் படிப்பகத்தின் சார்பில், தோழர் டி. சிவப்பிரகாசம் இல்லத்தில் இனிது நிகழ்ந்தது. தோழர்கள் பா. நாராயணன், மு. சோமசுந்தரம் ஆகியோர் விழாவினையும், வினைவகையும் பற்றி விளக்கமாகப் பேசினர்கள். பிறகு நன்றி கூறல் வாழ்த்துடன் விழா சிறப்புற முடிவுற்றது.

மலைக்கோட்டை

மலைக்கோட்டை:—பொங்கல் விழா 14-1-50 சனிக்கிழமை மலைக்கோட்டை அரசமரத் தெரு மைதானத்தில், தி. மு. க. கிளையின் தோழர்களால் மிகச் சிறப்புடன், நடந்தேறியது. தோழர் எம். முத்துசாமி, பி. ஏ. பி. எல், அவர்கள் தலைமையில், தோழர்கள் கே. எ. பி. விசுவநாதம் ஜி பரமகுரு, நா. வாசுதேவன் ஆகியோர் பொங்கல் விழாவும், தமிழர் கடமையும் என்பது பற்றி விரிவாகப் பேசினர். கூட்ட ஆரம்பத்தில் திருச்சி எஸ். தியாகராசன் குழுவினர்கள் நாதஸ்வர இன்னிசையும், முடிவில் திருச்சி சி. நடராசன் குழுவினர்களால் கிளாரினட் வாசிக்கப்பட்டு விழா இனிது முடிவுற்றது.

நிலக்கோட்டை

நிலக்கோட்டை:—15-1 50 ஞாயிறன்று 'பொங்கல் விழா'வினையொட்டி, தி. மு. க. தோழர்களால் பஜார் மைதானத்தில் ஓர் கூட்டம் நடைபெற்றது. பகலில் சார்பாக நடந்த பந்தாட்டம், ஓட்டமும் ஆகிய பந்தயங்களில் வெற்றி பெற்ற தோழர்களுக்கு அ. சோலைப்பிள்ளை அவர்கள் பரிசு வழங்கினர். பிறகு கூட்டத்திற்குத் தோழர் மா. ரத்தினம் தலைமை வகித்தார். இ. சாத்தான், பி. முத்திருளாண்டி டி. கே. சீனிவாசன் ஆகிய தோழர்கள் விழாவின் முக்கியத்துவத்தைப்பற்றி விளக்கமாகச் சொற்பொழிவாற்ற, தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இரவு 1 மணிக்கு இனிது முடிந்தது.

சிதம்பரம்

சிதம்பரம்: 19-1-50 அன்று இவ்வூர் சபாநாயகர் தெரு 87,81 எண்ணுள்ள ம. து. ரெங்கசாமி, எஸ். இராமனுதன் ஆகியோர் கடையில் தி. மு. க. தோழர்களால் பொங்கு நாட்கள் விழா மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

கதிர்நாயக்கம்பட்டி

க. நா. பட்டி,— 16—1—50-ல் ஓடசல்பட்டி, தி. மு. க. தோழர்களால் ர. அருணாசலம் அவர்கள் தலைமையில் பொங்கல்விழா கொண்டாடப்பட்டது. அதுபோது தோழர்கள் முனிராஜ் பி சோமுது எ. ரங்கசாமி ஆகியோர் கழகக் கொள்கைகளையும், விழாவின் அருமையையும் விளக்கிப்பேச தலைவர் முடிவுரை கூற, கூட்டம் இனிது முடிந்தது.

குடந்தை

குடந்தை:— 14—1—50 அன்று குடந்தையாதவர் தெரு, தமிழ் இலவச வாசகசாலையின் சார்பில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. அதுபோது தோழர்கள் திருவேங்கடம், பி. ஏ. ரா. பாலகிருஷ்ணன், வ. சாமிநாதன் ஆகியோர் விழாவினைப்பற்றி விரிவான சொற்பொழிவாற்ற, பின்பு தோழர் வ. சாமிநாதன் நீட்டிய 'வறுமை' எனும் நாடகம் நடைபெற விழா இனிது முடிந்தது.

திருப்பூர்

திருப்பூர்:—வ. உ. சி. வாலிபர் கழகத்தின் சார்பில் 15—1—50 அன்று மாலை பழைய பேட்டை மைதானத்தில் 'பொங்கல்விழா' தோழர் எஸ். ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது விழாவின் அவசியம் பற்றி, தோழர்கள் கோவை டலவர் சந்திரசேகர், முருகேசன், டி. ராதா கிருஷ்ணன், கே. பால்ராஜ் முதலியோர் சொற்பொழிவாற்றினர். டி. நடராஜன் நன்றி கூறிய பின் கூட்டம் இனிது முடிந்தது.

பொழுதுபோக்கு

தமிழ்—நாடகம்

ஒற்றைவாடை — ஔவையார்

தமிழ்

பிராட்வே —	பொன்முடி
சன் —	,,
சரஸ்வதி —	,,
மகாராணி —	வாழ்க்கை
பாரகன் —	,,
லட்சுமி —	,,
திருமகள் (சைதை)	,,
வெலிங்டன் —	அபூர்வ சகோதரர்கள்
ஒரையன் —	கிருஷ்ணவிஜயம்
கெயிட்டி —	,,
நியூ சென்ட்ரல்	நல்லதம்பி
கமலி —	பக்த ஜனனி
சயானி —	சக்ரதாரி

ஆங்கிலம்

Minerva —	Yes Sir, That's my Baby
Casino —	Joan of Arc
New Globe—	Glenn Ford
New Elphinstone—	Prince of Foxs
Midland —	The Three Musketeers
Roxy —	Jungle Jim

ஹிந்தி

அசோக் —	ஷப்நம்
சித்திரா —	சமுனை
செலக்ட் —	அந்தாஜ்
பிராட் —	மகாத்மா விது
ஸ்டார் —	தனிவாவ

புதிய வெளியீடு

அண்ணாவின் ★ ★ சொல் வன்மை

விலை 0 5-0

மறுமலர்ச்சி நூல் நிலையம், 13, ஆயலூர் முத்தையா முதலித் தெரு, சென்னை-1.

மூல வியாதிக்கு

கருணைக் கிழங்கு லேகியம்

மூல முளைகள், ரத்தம், சீழ் வடிதல், மூலப் பவுத்திரம், கட்டி, நீர்க் கசிவு, ரணம் சுகமாகும். வாய்வு, அஜீரணம், மலபந்தம் தீரும். 3 நாளில் குணம்தெரியும்.

12 நாள் மருந்து ரூ. 3—0—0

12 நாகபஸ்பம் ரூ. 2—0—0

P.S.R. பங்கஜம் வைத்யசாலை பழனி (S. I.)

திருமணம்

சென்னை அடையார் வரதபுரம் 55-எண்ணுள்ள இல்லத்தில் 5—2—50 காலை 9-மணிக்கு சி. கணபதி — ஜி. பாலாம்பிகை திருமணம் தோழர் ஏ. எஸ். ராமன் தலைமையில், தோழர்கள் எம். எஸ். முத்து, காஞ்சி மணிமொழியார், கே. ஆர். தாஸ, கே. எம். கண்ணபிரான் பேசுவர்.

கண்டதும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறணும். நடக்கமுடிஞ்சுதா? குடியரசு ஆகிற வரைக்கும் பச்சிந்துட்டு, குடியரசு ஆனதும் வீட்டிலே னு பேச்சு டாளே அவரை. அவரே ஒரு வடக்கித்தியாரு இருந்தா இப்படி நடக்கிருக்குமா? இதையெல்லாம் யோசிச்சுப் பார்க்க நேரமில்லே... இந்த லட்சணத்திலே சு. ம. காரரையும், கருஞ்சட்டைக்காரரையும் கிண்டல் பண்ண ஆரம்பிச்சுட்டா வெட்கமில்லாமே! இதே பாடத்தை அவரும் திருப்பிப் படிக்க ஆரம்பிச்சா நமக்கும் காங்கிரசுக்கும் கொஞ்ச நஞ்சமிருக்கிற மானமும் கப்பலேறிடுமே மாமா. இல்லே... நான்தான் கேக்கிறேன், அந்த ட்ராமாவிலே அவாளே கிண்டல் பண்ணினுமே, நம்மவர் சமாச்சாரம் என்ன? உங்க காங்கிரசிலே எத்தனை பேர் யோக்கியர்......

சேது: உஸ்! போதும் மூடடா வாயை. நேக்குத் தெரியுமே நீ வரவர கெட்டுப் போயிட்டேன்னு.

கிட்டு: நான் கெட்டுப் போகலே, உம்மைப் போன்றவர்களுக்குத்தான் கெட்ட புத்தி வளர்ந்துண்டு வருது. அதுகூடாது. ஒற்றுமையைக் கெடுக்கும் என்கிறதுக்காகத்தான் இவ்வளவு பேச்சு. இல்லாட்டா எனக்கென்ன? உங்கபாடு அவாபாடு. சரி. எனக்கு ஆபிசுக்கு நேரமாறது நான் போயிட்டு வந்தறேன் அப்புறம் பேசிக்கலாம்.

ஒத்திவைப்பு

திருவத்திபுரம், பிப். 3—

5-2-50-ல திருவண்ணாமலையில் நடைபெறவிருந்த வட ஆற்காடு மாவட்ட தி மு. கழக அமைப்புக் கூட்டம், சில எதிர்பாராக் காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

எம். நடேசன்
அமைப்பாளர்

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1